யிருக்கிறார்கள். அந்த இடத்தினுடைய விவரங்களை எல்லாம் சேகரித்து, அதாவது அங்கே அந்த வங்கியினுடைய கிளை திறப்பதற்குத் தேவையான முதலீடு முதலாண்டுக்கு 30 இலட்சம் ரூபாய் வைப்புத் தொகையாகவும், அடுத்த ஆண்டுக்கு 20 இலட்சம் ரூபாய் வைப்புத் தொகையாகவும் அங்கே இருக்கும் வணிகப் பெருமக்கள் மற்றும் விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து தேடித் தருவார்களானால், அந்த வேண்டுகோள் விரைவாக கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 337, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

337—

பஞ்சாயத்துகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்தல்

21231*—திருமதி க. பழனியம்மாள்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

கிராமப் பஞ்சாயத்துகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு நிதி ஒதுக்கீடு செய்வதில் மாற்றம் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. கிராமப் பஞ்சாயத்தை பொறுத்தமட்டில், பஞ்சாயத்துக்களில் வசூலிக்கப்படும் வீட்டுவரிக்கு ஈடாக ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் அரசு மான்யம் அளிக்கப்பட்டு வருகிறது. ஊராட்சிகளில் வசூலிக்கப்படும் ஸ்தல செஸ் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஈடு செய்யப்பட்டு அவ்வொன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகளுக்கு மக்கள் தொகை அடிப்படையிலேயே பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியம் ஊராட்சிகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் 20 காசு வீதம் மானியம் அளிக்கிறது. பேரூராட்சிகளுக்கு 10 காசு வீதம் அளிக்கிறது. மைய அரசு திட்டமான ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் நிதி மக்கள் தொகை

1995 ஏப்ரல் 18]

அடிப்படையில்தான் வழங்கப்படுகிறது. இதில் மாற்றங்கள் மைய அரசுதான் செய்ய வேண்டும். பொதுவாக நிதி ஆதாரங்களை மக்கள் தொகை அடிப்படையில் பிரித்து வழங்கும்போது பரவலாக பயனாளிக்கு போய்ச் சேருகிறது.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகை அதிகமாக இருக்கின்ற கிராமமாக இருந்தாலும், மக்கள் தொகை குறைவாக இருக்கின்ற கிராமமாக இருந்தாலும், அடிப்படை வசதி என்று வரும்போது எல்லாவற்றையும் செய்து கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில்தான் கிராமப்புறங்களில் இருக்கும் மக்களுக்கு இன்றைக்கு எல்லாவிதமான அடிப்படை வசதிகளும் கிடைத்து வருகிறது. அப்படிப்பட்ட இந்தச் சூழ்நிலையில் மக்கள் தொகை குறைவாக இருக்கின்ற சில கிராமங்களுக்கு, தொகையைக் குறைவாக ஒதுக்குவதால், சில வசதிகளைச் செய்ய முடியாமல் போகிறது. இதை மத்திய அரசாங்கம்தான் நிர்ணயிக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே கூறி இருக்கிறார்கள். அதை நம்முடைய தமிழக அரசு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, இந்த அடிப்படை வசதிகளை நிறைவேற்றுகின்ற வகையில் மக்கள் தொகை ஒன்றை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், அங்கே ஏற்படுத்த இருக்கின்ற வசதிகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அங்கே நிதி உதவி அதிகம் அளிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்கள் தொகையை அடிப்படையாக வைக்காமல் ஒவ்வொரு கிராமத்திலும் அங்கே இருக்கும் பிரச்சினைகளுக்கு ஏற்றவாறு நிதி ஒதுக்கீடு செய்தால், அந்த கிராம வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கும் என்று சொல்லி இருக்கிறார்கள். நான் தெரிவித்தது, மத்திய அரசு திட்டமான ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில்தான் இப்படி மக்கள் தொகை அடிப்படையில் நிதி வழங்கப்படுகிறது. இதில் மத்திய அரசு தான் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இது தமிழகத்திற்கு மட்டுமல்லாமல், இந்தியாவில் உள்ள அத்தனை மாநிலங்களுக்கும் ஒன்று சேர்த்து நார்ம்ஸ் அங்கே நிர்ணயித்திருக்கிறார்கள். மற்ற திட்டங்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு கிராமப்புற வளர்ச்சிக்காக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், அதற்கு

மேலாக பரவலாக்கப்பட்ட திட்டம் போன்று பல்வேறு அடிப்படை வசதிகளைப் பெருக்கும் திட்டங்கள் மாநில அரசால் உருவாக்கப்பட்டு வருகிறது. ஆகவே அந்தத் திட்டங்களில் எல்லாம் ஆங்காங்கு தேவைக்கு ஏற்றவாறு, அந்தந்த மக்கள் பிரதிநிதிகள் எடுத்து வைக்கிற மக்களுடைய கோரிக்கைகளுக்கு ஏற்றவாறு அங்கே பணிகள் நடைபெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு இது சம்பந்தமாக மைய அரசினுடைய திட்டத்திலும் கூட மக்கள் தொகை அடிப்படையிலே வழங்குவதற்கு பதிலாக அங்கேயிருக்கிற பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து நிதியொதுக்கீடு செய்ய அரசு பரிந்துரை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *11-10*

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் அங்கே வருமானம் மிகவும் குறைவாக இருக்கிற பகுதிகள் கூட இன்றைக்கு பேரூராட்சிகளாக இருந்து கொண்டிருக்கின்றன. அங்கே மக்களுடைய அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவது என்பது இப்போது அளிக்கப்படுகிற தொகையை வைத்து சரிசெய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, இந்தப் பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் கொஞ்சம் அதிக அளவில் நிதியைக் கொடுத்து, அங்கே அடிப்படை வசதிகளை உடனடியாக நிறைவேற்றித் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமை மோசமாக இருக்கிற பேரூராட்சிகளுக்கு இன்றைக்கு அரசு *50* சதவீதம் மானியம் வழங்குகிறது. இந்த *50* சதவீத மானியத்தை வைத்து அடிப்படை வசதிகளை பெருக்குகிற வகையில் இன்றைக்கு அந்த நிதிநிலைமை மோசமாக இருக்கிற பேரூராட்சிகளுக்கு தார்ச் சாலைகள் போடுவது, அங்கே இருக்கிற குடிநீர்க் குழாய்களைப் புதுப்பித்தல் போன்ற அத்தியாவசிய குடிநீர் விநியோகத் திட்டத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, இந்த நிதியொதுக்கீட்டின் காரணமாக, *50* சதவீத மானியம் அரசின் மூலமாக வழங்கப்படுவதன் காரணமாக, அங்கே நிதிநிலைமை மோசமாக இருக்கிற பேரூராட்சிகளிலும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.